RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2224s-22244

# சேக்கிழார் உணர்த்தும் சிவ வழிபாடு மரபு

**க. பிரீதா [அ, *]**

[அ] தமிழ்த்துறை, செவாலியர் டி.தாமஸ் எலிசபெத் மகளிர் கல்லூரி, பெரம்பூர், சென்னை-600011, தமிழ்நாடு, இந்தியா

# Shekhizhar about Shiva Worship

**K. Preetha [a, *]**

[a] Department of Tamil, Chevalier T. Thomas Elizabeth College for Women, Perambur, Chennai-600011, Tamil Nadu, India

* Corresponding Author: preethailamaran@gmail.com

Received: 26.09.2022
Revised: 28-10-2022
Accepted: 01-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

Saivism had spread all around the world in ancient times. Evidence of Shiva worship has also been found in the Hindus Valley Civilization. There are literary references to Shiva even in the Sangam period. Shiva has been linked with the metaphysical philosophy. In the seventh century A.D, Saivism had a revival and spread throughout Tamil Nadu. The Nayanmars spread the Saivism throughout Tamil Nadu. Their history was made into a great epic called Periyapuranam by Shekhizhar. This article examines the tradition of Shiva worship through Shekhizhar's works.

**Keywords:** Saivism, Shiva worship, Shekhizhar, Periyapuranam

## முன்னுரை

சிவ வழிபாட்டு முறை பழங்காலந்தொட்டு வழக்கில் இருந்து வருவதொன்றாகும். இன்றைய பாகிஸ்தான், வங்க தேசம், ஆப்கானிஸ்தான், நேபாளம் முதலிய பகுதிகளை உள்ளடக்கிய அன்றைய அகண்ட பாரதம் முழுவதும் சிவ வழிபாடு செழித்தோங்கி இருந்தது. கி.மு. மூவாயிரத்திற்கு முன்னர் சிறந்து விளங்கிய சிந்து சமவெளி நாகரித்திலும் சிவ வழிபாடு நிகழ்ந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. இச்சிந்து சமவெளி நாகரிகம் திராவிட நாகரிகம் என்று வரலாற்று ஆய்வாளர்களால் நிறுவப்பட்டுள்ளது. இன்றும் இந்திய நாடு முழுவதும் சிவ வழிபாடு பல்கிப் பரவியுள்ளது. சிவ வழிபாட்டின் ஆதாரத்தலம் தென்னிந்தியா என்றால் அது மிகையாகாது. அதிலும் தமிழகத்தில் இவ்வழிபாட்டு முறை மக்கள் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்திருந்தது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கியங்கள் சிவனைப் பல்வேறு இடங்களில் குறிப்பிடுகின்றன.

'நீல மணிமிடற்று ஒருவன்' (Manikam, 1999) என்று சங்ககால ஔவையார் ஈசனைக் குறிக்கின்றார். சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள் சிவனைப் 'பிறவா யாக்கைப் பெரியோன்' (Saravanan, 2008) என்று பாடுவதன் மூலம் ஆதி அந்தமில்லாத பரம்பொருள் அவன் என விளக்குகின்றார். கி.பி. மூன்றாம் நூற்றாண்டுத் தொடங்கி கி.பி. ஆறாம் நூற்றாண்டு வரை தமிழகத்தைக் களப்பிரர் ஆண்டனர். அக்காலத்தில் வடபுலத்திலிருந்து வந்த சமண, பௌத்த மதங்களின் தாக்கம் மிகுதியாய் இருந்ததால் சைவ சமயம் பொலிவிழந்து காணப்பட்டது. களப்பிரர் ஆட்சி மறைந்த பின் சைவப்பெரியார்கள் தோன்றித் தமிழகம் முழுவதும் சைவ சமயத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினர்.

அக்காலத்தில் குமரிமுனை தொடங்கித் துங்கபத்திரை ஆற்றங்கரை வரையிலும் சைவசமயத்தின் பத்தி மணம் கமழ்ந்தது. தமிழகம் முழுவதும் சிவனடியார்கள் தோன்றிச் சிவ வழிபாட்டை மேலோங்கச் செய்தனர். அவர்களுள் சிவநெறியில் தலையாயவர்களாக விளங்கிய சிவனருட் செல்வர்களைச் சுந்தரர் பெருமான் திருத்தொண்டத் தொகை எனும் நூலைப் பாடியதன் மூலம் உலகிற்கு அறிமுகப்படுத்தினார். திருத்தொண்டத் தொகையின் வழி நூலாக நம்பியாண்டார் நம்பி எழுதிய திருத்தொண்டர் திருவந்தாதி தோன்றிச் சைவ நாயன்மார்களின் வரலாற்றைச் சுருக்கமாகச் சொன்னது.

அநபாயச் சோழனின் முதலமைச்சராக விளங்கிய தெய்வச் சேக்கிழார் பெருமான் தமக்கிருந்த வாய்ப்பு வசதிகளைக் கொண்டு நாயன்மார்கள் வாழ்ந்த திருத்தலங்களுக்குச் சென்று பார்வையிட்டும் கல்வெட்டுக்கள் செப்பேடுகள் அடங்கிய நாயன்மார்கள் குறித்த தரவுகளைச் சேகரித்தும் திருத்தொண்டத் தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி ஆகியவற்றை ஆதார நூல்களாக வைத்தும் திருத்தொண்டர் மாக்கதை எனும் பெரிய புராணத்தைப் பாடி தமிழர்க்கும் சைவ உலகிற்கும் அழியாத கருவூலமாக வழங்கியுள்ளார். இக்காப்பியம் சைவ சமயக் காப்பியம் மட்டுமன்று. அறுபத்து மூவரின் வாழ்க்கை வரலாற்றைப் படம்பிடித்துக் காட்டும் வரலாற்றுக் காப்பியமாகவும் விளங்கின்றது. காலம் காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்த சிவ வழிபாட்டு மரபு இக்காப்பியத்தில் செம்மையாகவும் விளக்கமாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இத்திருத்தொண்டர் புராணத்தை ஆதாரமாக வைத்துப் பண்டை சிவ வழிபாட்டு மரபினை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் மூல நோக்கமாகும்.

## முப்பொருள் உண்மை

சைவ சமயத் தத்துவங்களை விளக்கும் சாத்திர நூல் சைவ சித்தாந்தம் எனப்படும். இது பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மையை ஆதாரமாகக் கொண்டுள்ளது. பதியாகிய சிவபெருமான் ஆதி அந்தமில்லாத பரம்பொருளாவான். அதுபோலவே ஆன்மாவும் அநாதியானது. ஆன்மா ‘பசு’ என அழைக்கப்படுகின்றது. இந்த ஆன்மாவை ஆணவம், கன்மம், மாயை ஆகிய பாசப் பொருட்கள் கவ்விக் கொண்டுள்ளன. ஆன்மா பிறவி என்ற ஒன்றை அடைவதற்கு முன்னமேயே ஆணவம் என்னும் இருள் மலத்தால் மூடுண்டுக் கிடக்கின்றது. பிறவியெடுத்து வாழத் தொடங்கும்போது ஆன்மாவின் செயல்பாடுகளால் நல்வினை, தீவினை என்னும் கன்மமலம் வந்து ஆன்மாவைச் சார்கின்றது. ஆன்மாவுக்குப் பிறவியெடுப்பதற்கான உடம்பினையும் பொறி புலன்கள் முதலான கருவி கரணங்களையும் வாழ்வதற்கான உலகத்தையும் அனுபவிப்பதற்கான போகங்களையும் மாயை வழங்குகின்றது. ஆன்மாவைப் பற்றியுள்ள இந்த மும்மலங்களையும் தனது முயற்சியினாலும் இறைவன் அருளாலும் ஆன்மாவானது நீக்கிக் கொண்டு பதியாகிய இறைவன் திருவடியைச் சென்றடையும் இந்நிலை முத்தி என அல்லது வீடுபேறு எனப்படும். இச்சித்தாந்த கொள்கையைத் திருமூலர்,

“பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்

பதியினைப் போல்பசு பாசம் அநாதி

பதியினை சென்றணுகா பசுபாசம்

பதிஅணு கின்பசு பாசம் நிலாவே” (Manikam, 2004)

எனச் செம்மையுறாப் பாடியுள்ளார். இக்கொள்கையில் பற்றுக் கொண்டு சிவனை வணங்கிய அடியார் பெருமக்கள் ‘சிவனடியார்கள்’ என அழைத்து அக்காலத்தில் போற்றப்பட்டனர்.

ஆன்மிகத் தேடல் கொண்ட பிற சமயச் சான்றோர்களும் சைவ சித்தாந்த கொள்கையை அறிந்து அக்கொள்கையால் ஈர்க்கப்பட்டுச் சிவனடி வழுத்தும் சீலர்களாக மாறினர். பல சமயங்களை ஆராய்ந்து புத்த சமயத்தைச் சார்ந்திருந்த சாக்கிய நாயனார் இறுதியில் சைவ சமயத்தைச் சார்ந்ததற்கும் இச்சித்தாந்த கொள்கையே காரணமாய் அமைந்தது. சாக்கிய நாயனார் சைவத்தை தழுவிய நிகழ்வைச் சேக்கிழார் பெருமான் பாடும்போது,

“செய்வினையும் செய்வானும்

அதன் பயனும் கொடுப்பானும்

மெய் வகையால் நான்கு ஆகும்

விதித்த பொருள் எனக் கொண்டே

இவ் இயல்பு சைவநெறி

அல்லவற்றுக்கு இல்லை என

உய்வகையால் பொருள் சிவன்என்று

அருளாலே உணர்ந்து அறிந்தார்" (Kalyanasundaram, 1993)

என நான்கு அடிகளில் தெளிவாகக் கூறியுள்ளார். இம் முப்பொருள் உண்மையை அடிப்படையாகக் கொண்டு சைவசமயம் கட்டமைக்கப்பட்டுள்ளது.

## திருக்கூட்டமரபு

காலந்தோறும் இறையடியார்கள் தோன்றி ஆன்மிக ஒளியைப் பாய்ச்சிக் கொண்டே வருகிறார்கள். இப்பெரியோர்களைத் திருவருட் பிரகாச வள்ளலார்,

'வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபு' (Vallalar, 2017)

எனச் சிறப்பித்துப் பாடுகின்றார். இத்திருக்கூட்டத்தாரின் இறைப்பற்றையும் மனஉறுதியையும் இடையறவுபடாத தொண்டின் மேன்மையையும் தெய்வச் சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணத்தில் திருக்கூட்டச் சிறப்பு எனும் பகுதியில் பொதுப்பட வைத்து விதந்து ஓதுகின்றார்.

சிவனரும் செல்வர்கள் தங்கள் திருமேனியில் திருநீற்றை அணிய வேண்டிய முறைப்படி அணிந்திருப்பார்கள். அத்திருநீற்று ஒளியால் அவர்தம் மேனி திகழும். அவ்வடியார் தம் திருவாய், ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதிக் கொண்டே இருக்கும். உலகில் நிலநடுக்கம் முதலிய எந்தப் பேரிடர் வந்த போதிலும் இவ்வடியார்களின் சிந்தை மாதொரு பாகரின் மலர்த்தாளைப் பற்றிய வண்ணமே இருக்கும். இவர்களைச் சேக்கிழார் பெருமான்,

"ஓது காதல் உறைப்பின் நெறி நின்றார்

கோது இலாத குணப்பெருங் குன்றுஅனார்" (Kalyanasundaram, 1993)

எனவும்,

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்

ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்" (Kalyanasundaram, 1993)

எனவும் பாடிப் பரவுகின்றார். திருத்தொண்டர் புராணத்தில் பாடப்பெறும் அறுபத்து மூன்று நாயன்மார்களும் அவரவர் வாழ்க்கை நிலைக்கேற்ப வெவ்வேறு வகையான சிவத்தொண்டுகளைப் புரிந்துள்ளனர். இச்சிவத் தொண்டுகளைப் புரிந்துள்ளனர். இச்சிவத்தொண்டுகள் அனைத்திலும் சேக்கிழார் உரைக்கும் பொது இலக்கணம் சிறிதும் பிசகாமல் கடைபிடிக்கப்பட்டிருப்பதைத் தெளிவாக உணர முடியும். அத்தகைய மேன்மையுடையவராய் அத்திருத்தொண்டர்கள் விளங்கியதால் அறுபத்து மூவர் என்னும் பெருமைக்குரியவர்களாகித் துதிக்கப்பட்டு வருகின்றனர்.

## சிவ வழிபாடு

அறுபத்து மூன்று நாயன்மார்களும் ஒவ்வொரு வகையில் ஈசனை வழிபாடு செய்துள்ளனர். இறைவனை அடைவதற்கான வழிபாட்டு படிநிலைகளைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்காகச் சைவ சித்தாந்தம் அமைத்துள்ளது. நாயன்மார்கள் இந்த நான்கு முறைகளையும் கடைப்பிடித்துள்ளனர். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் சரியை, கிரியை, யோகம்

ஆகிய மூன்று நிலைகளையும் அனுசரித்து ஞானம் எய்தி வீடுபேறடைந்த பெருமக்களாவர். இவர்கள் தமிழ்நாடு முழுவதும் திருத்தல யாத்திரை சென்று தீந்தமிழ்த் தேவாரப் பதிகங்கள் பாடி மாதொரு பாகரை வழிபட்டனர்.

சிவ ஆலயங்களுங்குச் சென்று அலகிடுதல், மெழுகுதல், திரு மஞ்சனம் ஆட்டுதல், விளக்கேற்றுதல், மலர் பறித்து மாலை தொடுத்துச் சார்த்துதல், பாடித் துதித்தல், சந்தனம் இழைத்து கொடுத்தல், உழவாரப் பணி செய்தல், ஆலயக் குளத்தைத் தூர் எடுத்தல், திருவைந்தெழுத்தை ஓதுதல் முதலிய தொண்டுகளை நாயன்மார்கள் புரிந்துள்ளனர்.

"வாசத் திருமஞ்சனம் பள்ளித்

தாமம் சாந்தம் மணித்தூபம்

தேசின் பெருகும் செழுந்தீபம்

முதலாயினவும் திருஅமுதும்

ஈசர்க்கு ஏற்ற பரிசினால்

அருச்சித்து அருள எந்நாளும்த்

பூசைக்கு அமர்ந்த பெருங்கூத்தர்

பொற்பு ஆர் சிலம்பின் ஒலி அளித்தார்" (Kalyanasundaram, 1993)

என்று கழறிற்றறிவார் நாயனார் பொன்னார் மேனியனை வழிபட்ட பூசனை முறையைச் சேக்கிழார் பெருமான் பாடுகின்றார்.

கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ ஆகிய நான்கு வகைப் பூக்களையும் வைகறை நேரத்தில் வண்டுகள் மொய்த்துத் தேன் உண்பதற்கு முன்னமே பறித்து வந்து அவற்றை மோந்து பார்ப்பதும் குற்றமெனக் கருதி தூய்மையாகக் கொண்டு வந்து வகை வகையான மாலைகள் தொடுத்து மாதர் பிறைக் கண்ணியானுக்குச் சூட்டி வணங்கும் வழக்கத்தைச் சிவத்தொண்டர்கள் கொண்டிருந்தனர். மாலை தொடுத்து ஈசனுக்குச் சாத்தும் கைத்தொண்டு மட்டுமே புரிந்து ஈசன் திருவடி அடைந்தவர் முருக நாயனார். அவர் தொடுத்த பலவகை மாலைகளைப் பற்றித் தொண்டர் சீர் பரவுவார்,

"கொண்டு வந்து தனிஇடத்தில்

இருந்து கோக்கும் கோவைகளும்

இண்டைச் சுருக்கும் தாமமுடன்

இணைக்கும் வாச மாலைகளும்

தண்டில் கட்டும் கண்ணிகளும்

தாளில் பிணைக்கும் பிணையல்களும்

நுண்தாது இறைக்கும் தொடையல்களும்

சமைத்து நுடங்கு நூல்மார்பர்" (Kalyanasundaram, 1993)

எனப் பாமாலை தொடுத்துள்ளார். கோவை, தாமம், மாலை, கண்ணி, பிணையல், தொடையல் முதலிய மாலை வகைகளை முருக நாயனார் தொடுத்தார் என மேற்கண்ட பாடல் பட்டியலிடுகின்றது. அடியார் பெருமக்கள் செம்மேனி அம்மானை வழிபாடு செய்த அனைத்து முறைகளுக்கும் ஆழமான இறையன்பே அடிப்படையாய் உள்ளதைப் பெரிய புராணம் விளக்கிச் செல்கின்றது.

## பத்தி செலுத்தும் முறை

அடியார் பெருமக்கள் ஈசனிடத்தில் செலுத்தும் அன்பே பத்தி எனப்படுகின்றது. நாயன்மார்கள் அனைவரும் சித்தத்தை சிவன் பாலே வைத்துச் செலுத்திய பத்திக்கு ஈடுஇணையே இல்லையெனலாம்.

அவர்கள் இகலோகப் பொருட்களையோ விண்ணுலகப் பெருவாழ்வையோ வேண்டி இறைவனைத் துதித்ததில்லை. அன்பின் பொருட்டாகவே அவனை வழிபட்டனர். நாயன்மார்களின் அன்பின் திறத்தைப் பெரியபுராணம்,

"கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி

வீடும் வேண்டா விறலின் விளங்கினார்" (Kalyanasundaram, 1993)

எனச் சிறப்பித்துப் பேசுகின்றது.

ஈசனைப் பூசனை செய்யும்போது எவ்வாறு பொறிபுலன்களும் கருவி கரணங்களும் ஒடுங்கிச் சாந்தகுணம் நிலவ வேண்டும் என்பதற்குச் சிறந்த உதாரணமாக நாயன்மார்கள் விளங்குகின்றனர். தம்பிரான் தோழராகிய சுந்தரமூர்த்தி நாயனார் தில்லைக்குத் திருத்தல யாத்திரை செல்லுகின்றார். அவர் ஆலயத்துள் நுழைந்து ஆடலரசனை தரிசனம் புரிந்து வழிபாடு செய்த திறத்தைச் செந்தமிழ் வல்ல சேக்கிழார் பெருமான் அற்புதமாகப் பாடி வைத்துள்ளார்.

"ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள

அளப்புஅரும் கரணங்கள் நான்கும்

சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்

திருந்து சாத்துவிகமே ஆக

இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த

எல்லைஇல் தனிப்பெரும் கூத்தின்

வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து

மாறுஇலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்" (Kalyanasundaram, 1993)

வன்தொண்டர் ஆடல் வல்லானைக் கண்ணாரக் காண்கின்றார். ஏனைய நான்கு பொறிகளில் அறியும் தன்மை அனைத்தும் கண்களுக்குள் வந்து கலந்து விட்டன. மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய அந்தக் கரணங்கள் நான்கும் தத்தம் செயல்பாட்டை இழந்து சித்தத்தில் வந்து சேர்ந்து விட்டன. முக்குணங்களில் ராஜச குணமும் தாமச குணமும் தவிர்ந்து போய்ச் சாத்துவிகம் என்னும் சாந்த குணமே மேலோங்கி நின்றது. இவ்வாறு நடராசப் பெருமானின் நற்காட்சியில் ஆழ்ந்து போன சுந்தரர் பெருமான் பேரின்ப வெள்ளத்துள் திளைத்து மாறுஇலா மகிழ்ச்சியில் மலர்ந்ததாகப் பாடும் சேக்கிழார் பத்திப் பெருக்குடன் செய்யும் வழிபாட்டிற்கான இலக்கணத்தை வகுத்து ஆன்மிக உலகிற்கு வழங்கியுள்ளார்.

வேடர் குலத்தில் தோன்றிய கண்ணப்ப நாயனார் முக்கண்ணனிடத்தில் வைத்த அன்பிற்கு எல்லையே இல்லை. கண்ணப்பனைப் போல் தம்மால் சிவனிடத்தில் அன்பு செலுத்த இயலவில்லை என வியக்கும் மணி வாசகப் பெருமான்,

"கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்பின்

என்னப்பன் என்ஒப்பில் என்னையும்ஆட் கொண்டருளி" (Subramaniya Pillai, 2009)

எனப் பாடுவது ஈண்டு நோக்கத்தக்கது. காளத்தி மலையில் குடுமித் தேவருக்குக் கண்ணப்பர் வாய்ப்புனலால் மஞ்சனம் ஆட்டித் தம் தலையில் செருகிக் கொண்டு வந்த மலர்களையிட்டுப் பதப்படுத்தித் தேக்கிலையில் கொண்டு வந்த இறைச்சியை இறைவனுக்கு உண்ண கொடுக்கின்றார் அர்ச்சகராகிய சிவ கோசரியார் ஆலயத்தின் அலங்கோல காட்சியைக் கண்டு அருவெறுப்பு அடைகின்றார். கண்ணப்பரின் அன்பின் பெருக்கைச் சிவகோசரியாருக்கு உணர்த்தத் திருவுளம் கொண்ட சிவபெருமான் அவர் தம் கனவில் தோன்றி,

"அவனுடைய வடிவுஎல்லாம் நம்பக்கல் அன்பு என்றும்

அவனுடைய அறிவுஎல்லாம் நமைஅறியும் அறிவு என்றும்

அவனுடைய செயல் எல்லாம் நமக்குஇனிய வாம் என்றும்

அவனுடைய நிலை இவ்வாறு அறிநீ என்று அருள் செய்தார்" (Kalyanasundaram, 1993)

எனச் சேக்கிழார் வரைகின்றார். கண்ணப்பர் வடிவம் அன்பால் நிரம்பிய வடிவமென்றும் அவர்தம் அறிவு இறைவனை அறியும் ஞான அறிவென்றும் அவர்தம் செயல்பாடுகளெல்லாம் இறைவனுக்கு இனிமை பயப்பவை என்றும் கூறிய உரைமொழிகள் கண்ணப்பரின் பக்தித் திறத்தை வெளிப்படுத்துபவையாயுள்ளன. இத்தகைய பத்திமையை அறுபத்து மூவரிடத்திலும் கண்டு இன்புற முடியும்.

## அடியார் தொண்டு

நாயன்மார்களில் பெரும்பான்மையோர் சிவனடியார்களுக்குச் செய்யும் தொண்டைச் சிரமேற் கொண்டிருந்தனர். எதிர்ப்படும் சிவனடியார்களை அவர்கள் வரவேற்று உபசாரம் செய்யும் திறம் ஒரு மரப்பாகவே மலர்ந்துதிருந்தது. வரவேற்கும் முறையில் நாயன்மார்கள் ஒருநாளும் சுணக்கம் காட்டியதில்லை. அன்பு மேலீட்டால் சிவனடியார்களை எதிர்கொண்டு கைகள் குவித்து வணங்கி அகமும் முகமும் மலர்ந்து அன்பு ததும்பும் வார்த்தைகளை மென்மையாகவும் இனிமையாகவும் மொழிந்து முகமன் கூறி இல்லத்திற்கு அழைத்துச் சென்று உபசரித்தார்கள். சிவனடியார்களுக்கு வேண்டும் பொருட்களை விருப்பத்தோடு வழங்கி இன்புற்றார்கள்.

அமர்நீதி நாயனார் துணி வியாபாரம் செய்தவர். அவர் சிவனடியார்களுக்கு வேண்டிய கந்தை ஆடை, கீழுடை, கோவணம் ஆகியவற்றைத் தொடர்ந்து வழங்கும் தொண்டினைப் புரிந்தவர். திருக்குறிப்புத் தொண்டர் ஆடைகளை வெளுக்கும் தொழில் புரிந்தவர். நாள்தோறும் ஒரு சிவனடியாருக்காவது அவர் தம் ஆடைகளை வெளுத்துக் கொடுத்த பின் தான் மக்களின் உடைகளைச் சலவை செய்யும் வழக்கத்தைக் கொண்டிருந்தவர்.

நேசநாயனார் சிவனடியார்களுக்கு ஆடைகளை நெய்து கொடுத்து அத்தொண்டினாலேயே உய்ந்தவர். இவ்வாறு நாயன்மார்கள் பலரும் அடியார்களுக்குப் பல வகைகளில் தொண்டு செய்யும் பேறு பெற்றிருந்ததைத் திருத்தொண்டர் புராணம் தீட்டிக் காட்டுகின்றது.

## அடியவர்க்கு அமுது படைத்தல்

இந்த உலகத்தில் உயிர்களை வருத்தும் மிகப் பெரிய நோய் பசிப்பிணியாகும். பசி தீர்க்கும் வள்ளலை நம் முன்னோர்கள் 'பசிப்பிணி மருத்துவன்' என்று பாராட்டி மகிழ்ந்துள்ளனர். உலகியலில் அறிவார்ந்த பெருமக்களின் அருமை கருதி 'இவர் வறுமை வாய்ப்படாமல் போற்றிப் பாதுகாக்கப்படவேண்டியவர்' எனக் கூறி பணமுடிப்பும் பரிசும் தந்து பராமரிப்பதைப் பேணுகின்றோம்.

சிவனடியார்கள் ஞானச் செல்வர்களாக விளங்குகின்றவர்கள். அவர்கள் நடமாடும் கோயில்கள். மனிதர்களின் ஆன்மாக்களில் மறைந்து நிற்கும் இறைவன் ஞானிகளின் ஆன்மாக்கில் வெளிப்பட்டுத் தோன்றி ஒளிர்வான். இச்சிறப்புக் கருதியே சேக்கிழார் பெருமானும்,

"மாசு இலாத மணிதிகழ் மேனிமேல்

பூசும் நீறுபோல் உள்ளும் புனிதர்கள்" (Kalyanasundaram, 1993)

என ஈசனடியார்களை ஏத்தி இசைக்கின்றார். இத்தகைய ஞானச் சான்றோர்களின் பசியைத் தீர்ப்பது புண்ணியத்திலும் பெரும் புண்ணியமாகும். ஒரு சிவஞானிக்கு அமுது படைத்து அவர் மகிழ்ந்து உண்பாரேயானால் அது மூவுலகமும் உண்டதற்குச் சமம் எனவும் அவருக்கு ஒரு பொருளைக் கொடுக்க அவர் அதை உவகையுடன் பெற்றுக் கொள்வாரேயானால் மூன்று உலகமும் பெற்றுக் கொண்டதற்குச் சமம் எனவும் திருமூலர் உரைக்கின்றார்.

"தண்டறு சிந்தைத் தபோதனர் தாமகிழ்ந்து

உண்டது மூன்று புவனமும் உண்டது

கொண்டது மூன்று புவனமும் கொண்டதென்று

எண்டிசை நந்தி யெடுத்துரைத்தானே" (Manikam, 2004)

என்பது திருமந்திரம் சிவனடியார்களுக்குத் திருஅமுது படைக்கும் வழக்கம் நம் தமிழகத்தில் தொன்று தொட்டு இருந்தது வந்துள்ளது. இச்சிவனடியார்களை இறைவனுக்கு நிகராக வைத்துச் சைவ மரபினர் தொழுது உபசரித்து வந்துள்ளனர். நாயன்மார்களில் பலரும் திருஅமுது படைக்கும் திருத்தொண்டில் தலைப்பட்டு நின்று இறைவனால் ஆன்மிக உலகிற்கு வெளிப் படுத்தப்பட்டுள்ளனர். இளையான்குடி மாற நாயனாரும் கலிக்கம்ப நாயனாரும் இத்தகைய சேவைக்குச் சிறந்த சான்றாளர்களாகத் திகழ்கின்றனர். தங்கள் ஊரில் புகும் சிவனடியார்களை இன்னுரை கூறி வரவேற்று இல்லத்திற்கு அழைத்து வந்து அவர் தம் திருப்பாதங்களை நீரால் விலக்கிய பின்னர் ஆசனத்தில் அமரச் செய்தனர். அவர்களுக்கு அருச்சனை செய்தனர்.

உண்ணல், தின்னல், நக்கல், பருகல் என்னும் நால்வகை உணவையும் அறுசுவை அமையச் சமைத்து அடியார் பெருமக்கள் விருப்பத்தோடு உண்ணும்படி உபசரித்தனர் என சேக்கிழார் 'பெருமான் உரைக்கின்றார்.

"கொண்டு வந்து மனைப்புகுந்து

குலாவு பாதம் விளக்கியே

மண்டு காதலின் அதனது இடை

வைத்து அருச்சனை செய்தபின்

உண்டி நாலு விதத்தில் ஆறு

சுவைத் திறத்தினில் ஒப்புயில

அண்டர் நாயகர் தொண்டர் இச்சசையில்

அமுது செய்ய அளித்து உளார்" (Kalyanasundaram, 1993)

சிவனருட் செல்வர்களை உபசரித்து போற்றிய மரபினைப் பெரியபுராணம் பதிவு செய்து அடுத்தடுத்த தலைமுறைகளுக்குக் கொண்டு செலுத்தும் சீரிய பணியினை ஆற்றி வருகின்றது என்றால் அது மிகையாகாது.

## அடியாரையே வணங்கிப் போற்றுதல்

சிவஞானச் செல்வர்களுக்கு முதலிடம் கொடுத்து அவர்களை வழிபடு தெய்வமாகக் கொண்டாடிய மரபும் பழந்தமிழகத்தில் இருந்துள்ளது. சோழ நாட்டின் திங்களூரில் வாழ்ந்த அப்பூதியடிகள் நாயனார் திருநாவுக்கரசரையே போற்றி வணங்கி உய்ந்த வரலாற்றைப் பெரியபுராணம் சிறப்பித்துப் பேசுகின்றது. அப்பூதியடிகளை அறிமுகப்படுத்த வந்த சேக்கிழார்,

"ஆண்டசீர் அரசின் பாதம்

அடைந்து அவர் அறியாமுன்னே

காண்தகு காதல் கூரக்

கலந்த அன்பினராய் உள்ளார்" (Kalyanasundaram, 1993)

எனக் குறிப்பிடுகின்றார். அப்பர் பெருமானைக் காணும் முன்பே அவர்தம் அற்புதச் செயல்களையும் அருமை பெருமைகளையும் கேள்விப்பட்டு அப்பூதியடிகள் தம் குடும்பத்தோடு

நாவுக்கரசரை வழிபடு தெய்வமகாவே கொண்டு வாழத் தொடங்கினார். தம் வாழ்க்கையின் அம்சம் ஒவ்வொன்றிலும் நாவுக்கரசரையே கண்டு அவர்தம் நாமத்தை நமச்சிவாய மந்திரத்தைப் போல ஓதி வந்தார்.

தம் இல்லத்திலிருந்த அளவை கருவிகள், துழாக்கோல், பிள்ளைகள், பசுக்கள், எருமைகள் உள்ளிட்ட உயிருள்ள உயிரற்ற எல்லாவற்றுக்கும் திருநாவுக்கரசரின் திருப்பெயரைச் சூட்டி அன்பொழுக அழைத்து வரலானார். அவர் அமைத்த சிவா மடங்கள், தண்ணீர்ப் பந்தல்கள் முதலான அறச்சாலைகளுக்கும் நாவுக்கரசரின் பெயரை இட்டு வழங்கினார். இச்செய்திகளைத் தெய்வப் புலவர் சேக்கிழார்,

"மனைப்பால் உள்ள

அளவைகள் நிறைகோல் மக்கள்

ஆவொடு மேதி மற்றும்

உளஎலாம் அரசின் நாமம்

சாற்றும் அவ்ஒழுக்க லாற்றார்" (Kalyanasundaram, 1993)

எனவும்,

"படிநிகழ் மடங்கள் தண்ணீர்ப்

பந்தர்கள் முதலாய் உள்ள

முடிவுஇலா அறங்கள் செய்து

முறைமையால் வாழும் நாளில்" (Kalyanasundaram, 1993)

எனவும் சொல்லோவியம் தீட்டிக் காட்டுகின்றார்.

இவ்வாறே திருநீலகண்டயாழ்ப் பாணரும் திருஞான சம்பந்தரைப் போற்றி வணங்கி சிவத்தலங்கள் தோறும் அவரோடு சென்று சம்பந்தப் பெருமான் பாடிய தேவாரப் பதிகங்களுக்கு யாழிசை சேர்த்து உடன் பாடி வந்த தொண்டுக்குரியவராய் விளங்கினார். பெருமண நல்லூரில் ஞானசம்பந்தருடன் சோதியில் கலந்து முத்திப் பேற்றை அடைந்தார்.

வைணவ மரபிலும் அடியாரைப் போற்றிய அடியவர்கள் இருந்துள்ளனர். மதுரகவியாழ்வார் நம்மாழ்வாரையே தெய்வமாக வணங்கி அவர்தம் பாதங்களைப் பாடிப்பரவும் திருத்தொண்டைப் புரிந்து உய்ந்தவராவார். நடமாடும் கோயில்களாகிய நம்பரை வணங்கினால் படமாடக் கோயிலிலுள்ள பகவனையும் வணங்கிய பயனுண்டு என்னும் தத்துவத்தை இவர்களின் செயல்பாடுகள் உணர்த்துகின்றன.

## நீற்றைப் போற்றும் நேயம்

சைவ மரபில் திருநீற்றுக்கு மிகப்பெரிய மகிமையுண்டு. திருநீறு சிவச்சின்னம் மட்டுமன்று. தீராத பிணிகளையும் தீர்த்து வைக்கும் தெய்வ ஆற்றல் வாய்ந்தது. சிவனடியார்கள் நாள்தோறும் முறையாக அணிந்த பெருமைக்குரியது. 'நீறில்லா நெற்றி பாழ்' என்னும் சொலவடையும் திருநீற்றின் இன்றியமையாமையை விளக்குவதாகும்.

திருஞான சம்பந்தர், பாண்டியன் நெடுமாறனுக்கு வந்துற்ற சுர நோயைத் திருநீற்றுப் பதிகம் பாடி அப்பாண்டியன் மேனியில் திருநீற்றைப் பூசி அந்நோயை நீக்கியருளினார், இத்தகைய மாண்புகளைக் கருதியே திருநீற்றைத் தங்கள் உயிருக்கும் மேலாக நாயன்மார்கள் போற்றி வந்தனர்.

சேதி நாட்டு மன்னராய் விளங்கிய மெய்ப்பொருள் நாயனார் திருநீற்றையே மெய்ப்பொருள் எனக் கொண்டு போற்றி வாழ்ந்ததால் அப்பெயரைப் பெற்றவர். மலைநாட்டைச் சிறப்பாக ஆண்டு வந்த

மெய்ப்பொருள் நாயனாரிடத்தில் பகையும் பொறாமையும் கொண்ட முத்தநாதன் எனும் வேற்று நாட்டு வேந்தன் பலமுறை போர் தொடுத்துத் தோற்றுப் போனான். மெய்ப்பொருள் நாயனார் சிவபத்தி பூண்டவராதலால் சிவனடியார் வேடத்தில் சென்று அவரை வீழ்த்த வேண்டும் என முடிவுகட்டினான். அவ்வாறே பொய்த்தவ வேடம் பூண்டு புத்தகக்கவளி ஏந்தி அப்புத்தகக் கட்டுக்குள் ஆயுதத்தை மறைத்துக் கொண்டு வந்தான். மெய்ப்பொருள் நாயனார், சிவவேடத்தில் வந்த முத்தநாதனை வரவேற்று ஆசனத்தில் அமர்த்தினார், புதிதாகக் கிடைத்த ஆகம நூலை நாயனாருக்கு விளக்கப் போவதாகக் கூறிய முத்தநாதன் புத்தகக்கட்டை அவிழ்ப்பது போல நடித்து மறைத்து வைத்த கத்தியை எடுத்து அவன் நினைத்த செயலை முடித்துக் கொண்டான். தரையில் சாய்ந்த மெய்ப்பொருள் நாயனார் தன் மெய்க்காப்பாளன் தத்தனை அழைத்து முத்தநாதனுக்கு எந்தத் தீங்கும் நேராமல் தன் நகரத்து எல்லையைத் தாண்டி விட்டுவரப் பணித்தார். பகை கொண்டு வெல்ல முடியாத முத்தநாதன் திருநீறு அணிந்து சிவனடியார் வேடத்தில் வந்து வெற்றி கொண்டான். அப்போதும் மெய்ப்பொருள் நாயனாரே வென்றவர் எனச் சேக்கிழார் பதிவு செய்கின்றார். திருநீறு அணிந்தவர்க்கு தீங்கு நேரக்கூடாது என்கிற கொள்கையில் நின்று, மெய்ப்பொருள் நாயனார் பெரு வெற்றி பெற்றுள்ளார். அவர் உயிர்விடும் தருணத்திலும் உறவினரையும் அரசு அலுவலர்களையும் அழைத்துத் திருநீற்றின் மீது வைக்கும் அன்பைத் தொடர்ந்து பாதுகாத்து வரவேண்டும் எனும் மரபினை உருவாக்கிச் சிவனடி சேர்ந்தார். இச்செய்தியைச் செந்தமிழ் வல்ல சேக்கிழார் பெருமான்,

“அரசியல் ஆயத்தார்க்கும்

அழிவுறும் காதலார்க்கும்

விரவிய செய்கை எல்லாம்

விளம்புவார், விதியினாலே

பரவிய திருநீற்று அன்பு

பாதுகாத்து உய்ப்பீர் என்று

புரவலர் மன்றுள் ஆடும்

பூங்கழல் சிந்தை செய்தார்” (Kalyanasundaram, 1993)

எனப் பாடிப் பரவசம் அடைகின்றார்.

மெய்ப்பொருள் நாயனாரைப் போன்று ஏனாதிநாத நாயனாரும் திருநீற்று அன்பைப் பாதுகாத்து உய்த்த தியாகச் சீலர் ஆவார். வீரர்களுக்குப் பயிற்சி அளிக்கும் படைத்தலைவராக விளங்கியதால் ஏனாதிநாதர் எனும் பெயர் பெற்றார். சிவனடியார்களைப் பேணும் சிந்தை கொண்டவராய் விளங்கினார். இவரைப் போலவே வீரர்களுக்குப் படை பயிற்சி அளிக்கும் அதிசூரன் என்பவன் ஏனாதி நாதர் மீது பொறாமை கொண்டு தன் பயிற்சி வீரர்களுடன் வந்து ஏனாதி நாதரையும் அவர்தம் குழுவினரையும் தாக்கினான். போரில் தோற்றும் போனான். வீரத்தால் ஏனாதிநாதரை வெல்லமுடியாதென எண்ணம் கொண்ட அதிசூரன் சிவச்சின்னமாகிய திருநீற்றைக் கொண்டு வெல்ல வேண்டுமென உள்ளத்தில் வஞ்சனையை விதைத்துக் கொண்டான். அதனால் அதிசூரன் நெற்றியில் திருநீறு அணிந்து கொண்டு அத்திருநீற்றை வெளியே தெரியாதவாறு கேடயத்தால் மறைத்துக் கொண்டு ஏனாதிநாதரைப் போருக்கு அழைத்தான். சினம் கொண்ட ஏனாதிநாதர் வழக்கம் போல அதிசூரனை எதிர்த்துப் போரிட்டார், போரின் இடையில் தக்க தருணம் பார்த்து அதிசூரன் தன் நெற்றியை மறைந்திருந்த கேடயத்தை விலக்கினான். அவன் நெற்றியில் திகழ்ந்த திருநீற்றுப் பொலிவைக் கண்ட ஏனாதி நாதர் துணுக்குற்றுச் சிவனடியார்க்கு எத்தீங்கும் விளைக்கலாகாது எனத் தீர்மானம் செய்தார். வாளையும் கேடயத்தையும் கீழே போட்டு விட்டால் நிராயுதபாணியைக் கொன்ற பழிபாவம் அதிசூரனை சேரும் என அஞ்சி போரிடுபவரைப் போலப் பாவனை செய்து அதிசூரன் வெல்லவும் தன்னைக் கொல்லவும் வழிவகை செய்தார். அதற்குக் காரணம் அவர் திருநீற்றின் மீது வைத்து அளவிலா அன்பும் மதிப்புமேயாகும். இச்சூழலை விளக்க வந்த குன்றத்தூர் கோமானாகிய அருண்மொழித் தேவர்,

“கண்ட பொழுதே கெட்டேன் முன்பு இவர்மேல் காணாத

வெண்திருநீற் றின்பொலிவு மேல்கண்டேன் வேறுஇனிஎன்?

அண்டர்பிரான் சீர்அடியார் ஆயினார் என்றுமனம்.

கொண்டு இவர்தம் கொள்கைக் குறிவழிநிற் பேன் என்று" (Kalyanasundaram, 1993)

எனப் பாடுகின்றார். சங்க காலத்திற்கு முன்பிருந்தே வீர மறவர்கள் தங்கள் நாட்டின் மீதும் நாடாளும் வேந்தன் மீதும் தீராத பற்று வைத்து அப்பற்றின் காரணமாகவே போர் தொடங்குவதற்கு முன்பு களப்பலியாகத் தங்கள் உயிரைத் தியாகம் செய்யும் வழக்கம் இருந்து வந்தது, அவ்வழக்கம் பின்னர் மரபாக ஆன்மிக உலகிலும் புகுந்து ஆன்மிகச் சின்னங்களைப் போற்றிப் பாதுகாப்பதும் அவற்றின் புனிதம் கெடாமலிருக்கத் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்வதுமான மாண்புடைய செயல்கள் தொடரலாயின. இன்றும் நாம் நாட்டுக் கொடியின் மீதும் நாட்டுப்பண் மீதும் நேயமும் மதிப்பும் பாராட்டி வருவது கண்கூடு. கொடிகாத்த குமரன் வரலாறும் இத்தியாக மரபின் தொடர்ச்சியேயாகும்.

## சாதி பேதங்கள் இல்லை

நாயன்மார்கள் வெவ்வேறு சாதிப் பிரிவுகளைச் சார்ந்திருந்தனர். சேக்கிழார் பெருமான் நாயன்மார்களின் சாதிகளை அவரவர் வரலாற்றைக் கூறும் பகுதியில் குறிப்பிட்டுள்ளார். சாதிப்பிரிவுகள் இருந்த போதிலும் சிவனடியார்கள் என்கிற வகையில் சாதிப் பேதங்கள் பாராட்டப்பட்டதாகத் தெரியவில்லை. உயர்ந்த குலம், தாழ்ந்த குலம் என்கிற பாகுபாடு சிவனடியார் மரபில் அறவே இல்லையெனலாம். அடியார் திருக்கூட்டம் வந்த போதெல்லாம் நாயன்மார்களும் ஏனைய சிவ பக்தர்களும் அனைவரையும் அன்பு மாறாமல் வரவேற்று விருந்து உபசாரம் செய்தனர். இதனைச் சேக்கிழார் பெருமான்,

"ஆரம் என்பு புனைந்த ஐயர்தம்

அன்பர் என்பது ஓர் தன்மையால்

நேர வந்தவர் யாவர் ஆயினும்

நித்தம் ஆகிய பத்திமுன்

கூர வந்துஎதிர் கொண்டு கைகள்

குவிந்து நின்று செவிப்புலத்து

ஈரம் மென் மதுரப்பதம் பரிவு

எய்த முன்உரை செய்த பின்" (Kalyanasundaram, 1993)

எனப் பாடுகின்றார். நேர வந்தவர் யாவர் ஆயினும்´ என்னும் தொடர் சிவபத்தியின் முன் எந்த வேற்றுமையும் இல்லை என்பதைச் சுட்டுகின்றது.

கண்ணப்ப நாயனார் வேடர் குலத்தில் தோன்றியவர். அவருடைய அளப்பரிய சிவபத்தியின் காரணமாக மிக உயர்ந்த நிலை அடைந்தார். கண்ணப்பருக்குப் பின் வந்த அடியார் பெருமக்கள் அவர் தம் அன்பின் மேன்மையை வியந்து பாராட்டுகின்றனர். `கலை மலிந்த வேல்நம்பி கண்ணப்பர்க்கு அடியேன்´ (Kalyanasundaram, 1993) என்று சுந்தரர் திருத்தொண்டத் தொகையில் பாடுகின்றார். திருக்காளத்தி மலையை அடைந்த கண்ணப்பர் ஈசனுக்குத் தொண்டு செய்து ஆறே நாளில் சிவப்பதம் அடைந்தது போல் தம்மால் அடைய இயலாது என்னும் பொருள்பட,

"தொண்டு செய்து நாளாறில் கண்இடந்து

அப்ப வல்லேனல்லன்" (Kalyanasundaram, 1993)

எனப் பட்டினத்தாரும் இசைக்கின்றார். பிற அடியார்களை எல்லாம் பிறைசூடிய பெருமான் தன் திருவடி நிழலில் சேர்த்துக் கொண்டதாகவும் கைலாய வாசத்தை வழங்கியதாகவும். சேக்கிழார் பதிவு

செய்துள்ளார். கண்ணைத் தோண்டி ஈசனுக்கு அப்பிய கண்ணப்பரை அந்த ஈசன் தன் வலப்பக்கத்தில் என்றும் இருப்பதான பெரு வரத்தை வழங்கினான் எனச் சேக்கிழார் சிறப்பித்துப் பேசுகின்றார்.

"என்வ லத்தில்

மாறு இலாய் நிற்க என்று

மன்னுபேர் அருள் புரிந்தார்" (Kalyanasundaram, 1993)

என்னும் சேக்கிழார் வாசகம் இங்குச் சிந்திக்கத் தக்கது. திருநாளைப் போவார் எனும் நந்தனார் ஆதிதிராவிடர் குலத்தில் பிறந்தவர். பிறவியிலேயே சிறந்த சிவ பக்தராக விளங்கியவர். சிவ வழிபாட்டுக்கான இசைக்கருவிகளுக்கு வேண்டிய தோல் முதலிய பொருட்களை வழங்கி வந்தவர். திருப்புன்கூர் சிவாலயத்தின் அருகில் குளம் தோண்டித் திருத்தொண்டு புரிந்தார். தில்லைச் சிற்றம்பலம் சென்று நடராசப் பெருமானை வணங்க வேண்டும் என்னும் ஆவல் பெருகி வந்ததால் ஒருநாள் தில்லைக்குச் சென்று ஆலயத்திற்குள் நுழைய முடியாதவராய் மதில்புறத்தை வலம் வந்து வாயிலுக்கு வெளியே தங்கினார். தில்லை வாழ் அந்தணர்களின் கனவில் தோன்றிய நடராசப் பெருமான் நந்தனாரின் பக்திப்பெருக்கை அவர்களுக்கு உரைத்து நெருப்பு வளர்த்து அவரை அதில் மூழ்கி எழுந்து தன்னிடம் வரச் செய்யுமாறு பணித்தார். தில்லைவாழ் அந்தணர்கள் நந்தனாரை அணுகி,`ஐயரே! நடராச பெருமான் அருளிச் செய்ததால் நாங்கள் உம்மிடம் வந்துள்ளோம்' எனக் கூறினர். தில்லைவாழ் அந்தணர்கள் ஆகிய ஐயர் குலத்தவர் அனைவரும் சேர்ந்து தீண்டத்தகாதவர் என்று ஒதுக்கப்பட்ட நந்தனாரை,

"ஐயரே! அம்பலவர் அருளால்

இப்பொழுது அணைந்தோம்" (Kalyanasundaram, 1993)

என்று அழைக்கும்படிச் செய்துள்ளார் சேக்கிழார். சிவபக்தி பூண்ட சீலத்தார் நந்தனார் ஐயருக்கும் ஐயராய் உயர்ந்து விளங்கும் பெருமையைச் சேக்கிழார் பதிவு செய்து, ஓரிலக்கியம் ஆற்ற வேண்டிய சமத்துவப் பணியை புரிந்துள்ளார்.

தாழ்ந்த வகுப்பாகக் கருதப்பட்ட இசைப்பாணர் குலத்தில் தோன்றியவர் திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார், இவர் அந்தணர் குலத்தில் தோன்றிய திருஞானசம்பந்தருடன் இணைந்து திருத்தல யாத்திரை புரிந்து தேவாரப் பதிகங்களுக்கு யாழ் வாசித்த பெருமைக்குரியவர். அந்தணராகிய திருநீலநக்க நாயனார் யாகம் வளர்த்து வேள்வி செய்தபோது அவ்வேள்விப் பந்தலில் அமரும் சமத்துவத்தைத் திருநீலகண்ட யாழ்ப்பாணர் பெற்றிருந்தார். சாதியால் ஏற்படும் உயர்வு தாழ்வுகளெல்லாம் சைவ ஆன்மிகத்தின் முன்னர் கதிரவனைக் கண்ட பனி போல மறைந்து போயின என்பதை நாயன்மார்களின் வரலாறுகள் உணர்த்துகின்றன. சமுதாயத்திலும் இத்தகைய ஆன்மிகச் சமத்துவம் மலர வேண்டும் என்பதுதான் சான்றோர்களின் உள்ளக்கிடக்கை.

"செய்தொழில் வேற்றுமைச் சிறப்பும் இல்லை திருவள்ளுவர் இவ்வுலகில் பிறப்பினால் அனைவரும் சமம் என்றும் செய்கின்ற தொழில் வேற்றுமை காரணமாக வரும் சிறப்புக்கள் ஒத்துப் போவதில்லை என்றும் கூறியுள்ளார். அச்சான்றோர் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே சாதி மறுப்புக் கொள்கையை இம்மண்ணில் விதைத்துள்ளார்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா

செய்தொழில் வேற்றுமை யான்" (Puliyur Kesigan, 2016)

என்பது குறட்பா. இன்றளவும் செய்தொழில் வேற்றுமையால் வரும் சிறப்புக்கள் இவ்வுலகில் நீடித்து வருகின்றன. இனியும் தொடரும் என்பது திண்ணம். ஆள்வோர், அதிகாரிகள், கீழ்மட்ட அலுவலர்கள் என்கிற தொழில் வேற்றுமைச் சிறப்புக்கள் தவிர்க்க முடியாதவையாகவும் உள்ளன.

சைவ சமயக் குரவர்களாகிய நாயன்மார்களில் அரசர், அமைச்சர், படைத் தலைவர், படை மறவர், சலவைத் தொழில் செய்பவர், உழவர் எனப் பல வகைத் தொழில் புரிந்தவர் இருந்தனர்.

இவர்கள் சிவனடியார்களைக் காணும் போதெல்லாம் சிவபெருமானைத் தரிசிக்கும் ஆனந்தமடைந்து அன்பு கொண்டாடினர்.

இவர் உயர்ந்த தொழில் செய்பவர்; இவர் தாழ்ந்த வினை புரிபவர் ' எனப் பிரித்துப் பார்க்கும் பேத புத்தி அவர்களிடத்தில் இருந்ததேயில்லை. திருவஞ்சைக் களத்தை ஆட்சி புரிந்த சேர மன்னன் சேரமான் பெருமாள் நாயனார் ஆவார். இவர் உயிர்கள் பேசுவதை எல்லாம் புரிந்து கொள்ளும் ஆற்றல் உடையவராய் விளங்கியதால்,`கழறிற்றறிவார்? என்னும் சிறப்புப் பெயர் பெற்றிருந்தார். சிவனை மறவாத சிந்தையராய்த் திகழ்ந்த இச்சீலர், அரசப் பொறுப்பேற்ற பிறகு பட்டத்துயானை மீதேறி பரிவாரங்கள் புடை சூழ நகர்வலம் வரத் தொடங்கினார். அப்போது வெளுத்த துணி மூட்டையைத் தலையில் தாங்கி உவர்மண் ஒழுகும் மேனியுடன் சலவைத் தொழிலாளி ஒருவர் எதிரே வருவதைக் கண்டார். அக்காட்சி திருநீறு அணிந்த சிவனடியாரின் வடிவத்தைச் சேரமான் பெருமாள் நாயனாருக்கு நினைவூட்டியது. உடனே அவர் பட்டத்து யானையை விட்டிறங்கி அச்சலவைத் தொழிலாளியை வணங்கி நின்றார். திகைத்த அத்தொழிலாளி தன் தொழிலைக் கூறி அரசரிடம் அச்சத்துடன் நின்றார். நாயனார் அத்தொழிலாளியை நோக்கிச் சிவனடியார் தோற்றத்தை நினைவூட்டியதால் வணங்கியதாகச் சொல்லி அவரை அனுப்பி வைத்தார்.

"இதனைச் சேக்கிழார் பெருமான்,

சேரர் பெருமான் தொழக் கண்டு

சிந்தை கலங்கி முன் வணங்க

யார் என்று அடியேனைக் கொண்டது

அடியேன் அடிவண்ணான் என்னச்

சேரர் பிரானும் அடிச் சேரன்த

அடியேன் என்று திரு நீற்றின்

வார வேடம் நினைப்பித்தீர்

வருந்தாது ஏகும் என மொழிந்தார்" (Kalyanasundaram, 1993)

எனக் காட்சிப்படுத்துகின்றார். இச்செய்யுளில் வரும் `அடியேன் அடிவண்ணான்' என்னும் தொடரும் 'அடிசேரன் அடியேன்' என்னும் தொடரும் செய்தொழில் வேற்றுமையால் வரும் சிறப்பினைத் தகர்ப்பனவாய் உள்ளன. சலவைத் தொழிலாளி தன்னை 'அடிமை வண்ணான்எனச் சொன்னவுடன் நாயன்மார் உடனே 'அடிமைச் சேரன்' என அறிவித்துக் கொள்ளும் மாண்பு சிவநேயத்தின் முன் மனித இனத்துக்குள் தோன்றும் ஏற்றத்தாழ்வுகள் அனைத்தும் இல்லையாகிப் போகும் என்பதை உணர்த்துகின்றன. சேரர்பிரான் சலவைத் தொழிலாளியைப் பணிவுடன் வணங்கி நிற்கும் காட்சியானது ஆன்மாவின் மலரிலிருந்து அன்பு வாசம் வீசும் உன்னத உணர்வு நிலைக் காட்சியாகும். இன்று அரசியல்வாதிகள் மக்களைப் பார்த்து வணங்கும் தேர்தல் காலத்துப் போலித்தனமும் வஞ்சனையும் கலந்து பொய் வணக்கத்தோடு நாயனாரின் வணக்கத்தை, ஒப்பிட்டு நோக்கினால் அவர்தம் ஆன்மநேயம் நிறைந்த அன்பின் மேன்மையை உணர முடியும்.

கலிக்கம்ப நாயனார் சிவனடிமை பூண்ட செல்வந்தர். சிவனடியார்களைச், சிந்தை மகிழ்ந்து வரவேற்று அமுது படைக்கும் அருளாளர். ஒவ்வொரு நாளும் நாடிவரும் சிவனடியார்களை அன்பொழுக அழைத்து அவர்தம் திருப்பாதங்களுக்குத் தமது மனைவியார் நீர்வார்க்க கலிக்கம்ப நாயனார் அவர் தம் பாதங்களை விலக்கியப் பின்னர் அமுது படைக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். ஒருநாள் திரளான சிவனடியார் கூட்டம் வந்தது. மனைவியார் நீர்வார்க்க நாயனார் சிவனடியார்களின் திருவடிகளை அலம்பிக் கொண்டிருந்தார். முன்னர் கலிக்கம்பரிடம் ஏவல் பணியாற்றிய ஒருவர் தற்போது சிவனடியாராய் வந்து நின்றார். `இவர் இதற்கு முன் நம்மிடம் பணியாளாய் இருந்தவர் அல்லவா? ' என நினைத்து நீர் வார்த்துக் கொண்டிருந்த மனைவியார் சற்றுத் தயங்கினார். அந்தப் பேத எண்ணத்தை உணர்ந்து சினம் கொண்ட கலிக்கம்பர் மனைவியின் கரத்தைத் துண்டித்து தண்டனை

வழங்குகின்றார். சிவத்தொண்டு என்று வந்தால் நெறியும் நேர்த்தியும் கடைப்பிடிக்க வேண்டும் என்பதிலும் எத்தகைய வேற்றுமையும் பாராட்டக்கூடாது என்பதிலும் நாயன்மார்கள் அல்லது சிவனடியார்கள் உறுதி பூண்டு வாழ்ந்தனர் என்பதை இச்செயல்பாடுகள் நிறுவுகின்றன.

## மூத்தவர் என்னும் சாத்திரம் இல்லை

வயதில் மூத்தவர்களை இளையவர்கள் மதித்து வணங்க வேண்டும் என்கிற உலகியல் மரபு தொடர்ந்து இருந்து வருகிறது. பணி மூப்பு உடையவர்களை இளம் மூப்பு உடையவர்கள் மதித்துப் பின்பற்ற வேண்டும் என்னும் அலுவல் விதிமுறையும் உள்ளது. ஆன்மிக உலகில் மேற்கண்ட வழக்காற்றுக்கும் விதிமுறைக்கும் இடமில்லை என்று கூற வேண்டும். ஓரடியார்,` நான் வயதில் மூத்தவன் அல்லது தொண்டில் மூத்தவன் ஆகவே இளைய அடியார்கள் என்னை வணங்கிப் போற்ற வேண்டும்' என்று கூறுவாரேயானால் அவர் அடியார்க்குரிய தகுதியினை அப்பொழுதே இழந்து விடுவார். அகந்தை அற்ற போக்குத்தான் ஆன்மிக ஞானத்தின் ஆதாரமாய் உள்ளது. `யான்´ என்னும் அகப்பற்றும் `எனது´ என்னும் புறப்பற்றும் இருக்கும் வரையில் ஒருவருக்கு ஆன்ம ஞானம் துலங்காது. ஆன்மா தன்னை அறிந்து கொண்டால் இறைவனை உணரும் மெய்ஞ்ஞானம் தோன்றும். இதைத்தான் வள்ளுவப் பெருந்தகையும்,

"யான்எனது என்னும் செருகறுப்பான் வானோருக்கு

உயர்ந்த உலகம் புகும்" (Puliyur Kesigan, 2016)

என அழகாக விளக்குகின்றார். சைவ அடியார்களாகிய நாயன்மார்கள், மற்ற அடியார்கள் அனைவரையும் மேற்கண்ட வேறுபாடுகள் எவற்றையும் பாராட்டாமல் அவர்களை நேசித்துப் பூசித்தனர்.

திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் பிறந்த சைவப் பெரியார்கள் ஆவர். திருநாவுக்கரசர் வயதிலும் சிவத்தொண்டிலும் மூத்தவர். அற்புதச் செயல்கள் பல புரிந்த திருஞானச் செல்வர். மூன்று வயதில் ஞானம் பெற்று மிகுசைவத் துறை விளங்கத் தோன்றியவர் பாலகராகிய திருஞானசம்பந்தர். இவ்விரு பெரியார்களும் சந்தித்துக் கொண்ட பொழுதுகளில் ஒருவரையொருவர் முந்திக்கொண்டு வணங்கித் துதித்த காட்சிகள் அற்புதக் காட்சிகள் ஆகும். பணிவும் சிவநேயமும் அவர்கள் உள்ளங்களில் பொங்கித் ததும்பின. திருப்பூந்துருத்திச் சிவமடத்தில் திருநாவுக்கரசர் தங்கியிருந்தார். திருஞானசம்பந்தர் திருத்தல யாத்திரை மேற்கொண்டு வரும்போது அப்பர் பெருமான், பூந்துருத்தியில் தங்கியிருந்ததைக் கேள்வியுற்று அவரைத் தரிசிக்க பல்லக்கில் வந்து கொண்டிருந்தார். சம்பந்தர் தன்னைக் காண வருவதையறிந்த சொல்லரசர், ஊருக்கு வெளியே சென்று சம்பந்தர் அறியா வண்ணம் அவர் ஏறி வந்த பல்லக்கைச் சுமந்து வரலானார். திருப்பூந்துருத்திக்குள் நுழைந்த சீர்காழிச் செல்வர், அப்பர் பெருமான் எங்குள்ளார்?" எனக் கேட்டார். அப்போது உங்கள் அடியவன் உமது திருப்பாதங்களைத் தாங்கி வரும் பெருவாழ்வு பெற்றவனாய் இங்கு உள்ளேன்´ எனப் பல்லக்கின் கீழிருந்து குரல் வந்தது. நாவுக்கரசர் தமது பல்லக்கை சுமந்து வருவதை அறிந்த சம்பந்தர் துணுக்குற்றுப் பல்லக்கை விட்டிறங்கி, அப்பர் பெருமானை வணங்க முற்பட்டார். அவரைத் தடுத்து நாவுக்கரசர் தாம் முந்திக்கொண்டு பிள்ளையாரை வணங்கிப் போற்றினார். இச்சிவானந்தக் காட்சியைச் சேக்கிழார் பெருமான்,

"திருஞான மாமுனிவர் அரசிருந்த பூந்துருத்திக்(கு)

அருகாக எழுந்தருளி "எங்குற்றார்? அப்பர் என"

உருகாநின்று உம்அடியேன் உம்அடிகள் தாங்கிவரும்

பெருவாழ்வு வந்தெய்தப் பெற்றிங்குற் றேன்என்றார்

பிள்ளையார் அதுகேளாப் பெருகுவிரை வுடன்இழிந்தே

உள்ளமிகு பதைப்பெய்தி உடையஅர சினைவணங்க

வள்ளலார் வாகீசர் அவர்வணங்கா முன்வணங்கத்

துள்ளுவான் மறிக்கரத்தார் தொண்டரெலாருந் தொழுதார்த்தார்”

எனச் சொல்லோவியம் தீட்டிக் காட்டுகின்றார். சம்பந்தப் பெருமானைப் பல்லக்கில் சுமந்து வந்த பாக்கியத்தைப் `பெருவாழ்வு´ என அப்பர் பெருமான் குறிப்பிட்டுள்ளார். வயதால் மூத்தவர் சிவத்தொண்டால் மூப்புடையவர் என்கிற வேற்றுமைகள் எவையும் இங்கே துளியும் தலைக் காட்டவில்லை. இறையன்பும் அடியார் நேயமும் மட்டுமே ஆனந்தத் தாண்டவம் புரிந்து நின்றன. அகந்தைக் கிழங்கை உள்ளத்திலிருந்து அகழ்ந்தெடுத்த அடியார்ப் பெருமக்களுக்கே இத்தகைய திருச்செயல்கள் சாத்தியமாகும்.

## முடிவுரை

அன்பையும் சிவத்தையும் பிரித்துப் பார்க்க முடியாத அளவிற்கு தனித்துவமானதாகவும் மிகப் பழமையானதாகவும் சிவ வழிபாட்டு மரபு விளங்குகின்றது. தெய்வமாக்காப்பியமாகிய திருத்தொண்டர் புராணத்தைப் பாடியருளிய சேக்கிழார் பெருமான் வழி நின்று நாயன்மார்களின் வரலாற்றையும் வழிபாட்டு முறையையும் பயின்று நுட்பமாக ஆய்ந்ததன் விளைவாகப் பின்வரும் முடிவுகள் அறியப்பெறுகின்றன. சைவ சமயம் பதி,பசு,பாசம் ஆகிய முப்பொருள் உண்மைகளைத் தெய்வச் சித்தாந்தத்தின் அடிப்படைத் தத்துவமாகக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளது. சைவ சித்தாந்தத்தின் வளர்ச்சி நிலைகள் யாவும் இம்முப்பொருள் உண்மையின் விரிவாகும். நாயன்மார்களும் ஏனைய சிவனடியார்களும் சிவம் எனும் செம்பொருளை முற்றப்பற்றியவர்களாகவும் உலகியல் வாழ்வில் உண்டாகும் ஆக்கத்தினையும் கேட்டினையும் கடந்த ஞானச் சீலர்களாகவும் விளங்கினார்கள். அதனால் உலகியல் மாந்தரின் பூசனைக்கும் போற்றுதலுக்கும் உரிய திருக்கூட்ட மரபினராய்க் கருதப்பட்டனர். நாயன்மார்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வழிபாட்டு முறையை மேற்கொண்டிருந்தனர். அன்பு ததும்பும் உள்ளத்தோடு செய்யும் எத்தகைய வழிபாட்டையும் இறைவன் ஏற்றுத் திருவருள் புரிவான் என்பதை அவர்களின் வழிபாட்டு முறைகள் தெளிவுபடுத்துகின்றன. சிவபத்தி செலுத்தும் போது பொறிப்புலன்கள் ஒடுங்க வேண்டும். மனம், அகங்காரம், புத்தி, சித்தம் ஆகிய அந்தக் கரணங்களில் நான்கில் முதல் மூன்று கரணங்களும் ஆழ்மனமாகிய சித்தத்தில் வந்து ஒன்ற வேண்டும். இக்குணங்களில் ராஜசம், தாமசம் ஆகிய இரு குணங்களும் நீங்கிப் போய் சாத்விகம் என்னும் சாந்த குணமே தழைத்தோங்க வேண்டும் என்பதைச் சிவ வழிபாட்டு மரபாகப் பெரியபுராணம் அறிவிக்கின்றது. நாயன்மார்கள் அனைவரும் சிவனடியார்களுக்குப் பல வகைகளிலும் தொண்டு புரிந்துள்ளனர். அவர்தம் வசதிக்கேற்ப சிவனடியார்களுக்கு வேண்டும் பொருட்களை வழங்குவதைத் திருத்தொண்டாகக் கருதி வாழ்ந்தனர் என்பது பெறப்படுகின்றது. சிவனடியார்களின் ஆன்மாக்களில் இறைவன் வெளிப்பட்டுத் தோன்றி ஒளிர்வதால் நாயன்மார்கள் சிவனடியார்களுக்கு அமுது படைத்தலை தலையாயத் தொண்டாகக் கருதி நித்தமும் அத்தொண்டைப் புரிந்து வந்தனர். அடியார் உண்டு மகிழ்ந்தால் அம்மகிழ்ச்சியை ஆண்டவனும் அடைவான் என்பதைச் சைவப் பெருமக்கள் உணர்ந்து செயல்பட்டனர். ஆண்டவன் மீது பத்தி இருந்தாலும் ஆண்டவனை உணர்ந்த சிவஞானப் பெருமக்களை வணங்கித் தொழுவதற்குச் சிறப்பிடம் கொடுத்த அப்பூதியடிகள் நாயனாரைப் போன்றவர்கள் அக்காலத்தில் இருந்துள்ளனர். அப்பூதியடிகளின் இல்லத்திலும் அவர் புரிந்த செயல்களிலும் திருநாவுக்கரசர் திருநாமமே மந்திர ஒளியாய் நிறைந்திருந்ததை அறிய முடிகின்றது. சிவச் சின்னங்களாகிய திருநீற்றையும் சிவக் கண்மணி என்னும் உருத்திராக்க மணியையும் நாயன்மார்கள் உயிரினும் மேலாகப் போற்றினர். மெய்ப்பொருள் நாயனாரும் ஏனாதிநாத நாயனாரும் பகைவர்கள் திருநீற்றை அணிந்து வந்ததைக் கண்டு திருநீற்றின் மேல் வைத்த நேயத்திற்காகத் தங்கள் இன்னுயிரையே தியாகம் செய்தனர். இச்செயலால் நாயன்மார்களின் சிவச் சின்னப் பற்றை அறிய முடிகின்றது. பெரியபுராணம் நாயன்மார்கள் சார்ந்த குலத்தைப் பதிவு செய்துள்ளது. ஆனால் அவர்கள் சாதிப்பேதம் பாராட்டியதில்லை. சிவனடியார் குலம் என்னும் தகுதிப் பாட்டைக் கொண்டவர்களாக மட்டுமே விளங்கினர். செய்யும் தொழில் வேற்றுமையால் சிறப்புக்கள் உண்டாவது உலகியற்கை. ஆனால் நாயன்மார்கள் இத்தொழில் வேற்றுமைச் சிறப்புக்களையும் கடந்த சிவநேயச் செல்வர்களாகத் திகழ்கின்றனர். வயது மூப்பு, தொண்டின் மூப்பு இவற்றினால் உண்டாகும் மதிப்புக்களையும் நாயன்மார்கள் கருதியதில்லை. ஆணவம் அகன்ற சிந்தையில் தான், ஆண்டவன் குடியிருப்பபான்

என்பதை உணர்ந்தவர்களாதலால் ஆன்மாவின் சிறப்பை உணர்ந்து செயல்பட்டுள்ளனர். மேற்கண்ட உண்மைகளை இவ்வாய்வுக் கட்டுரை வெளிப்படுத்துகின்றது. இன்றைய சைவ உலகமும் உலகியல் சமுதாயமும் நாயன்மார்களின் அன்பு நெறியிலும் வாழ்க்கை முறையிலும் ஆழங்கால் பட்டுத் தங்கள் கடைப்பிடியாகக் கொள்ளுமானால் உலகம் முழுவதும் தியாகம் தழைத்து அமைதி பூத்து ஆன்ம நேயக் கனிகள் கனிந்து குலுங்கத் தொடங்கும். உலகம் முழுமைக்கும் தேவையான இத்தகைய உண்மைகளைச் சைவசமயத்திற்கு உரியவை என்னும் குறுகிய கண்ணோட்டத்தோடு புறம் தள்ளாமல் உலகத்தார் சமயக் கட்டுக்களைக் கடந்து அணுகினால் இது யாவர்க்கும் பெருநன்மை பயக்கும். இனி வரும் தமிழாய்வும் இத்தகைய தேவையை நிறைவு செய்ய வேண்டிய கட்டாயம் உள்ளது.

## References


Kalyanasundaram, V. (1993) Periya Puranam, Sekkilhar Araichi Maiyam, Chennai, India

Manikam, A. (1999) Purananuru, Varthaman Pathippagam, Chennai, India

Manikam, A. (2004) Thirumanthiram, Varthaman Pathippagam, Chennai, India

Puliyur Kesigan, (2016) Thirukural, Poompuhar Pathippagam, Chennai, India

Saravanan, P. (2008) Silapathikaram, Santhiya Pathippagam, Chennai, India

Subramaniya Pillai, K. (2009) Thiruvasagam, Poompuhar Pathippagam, Chennai, India

Vallalar, (2017) Thiru Arutpa, Arutpa Pathippagam, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License